DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 1 FOR PROSECUTION..

Name : இளையராஜா

Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

நான் உசிலம்பட்டி தாலுகா, கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் மாமனார். என் மனைவிபெயர் ஜெயா. இறந்தவர் என் மாமியார் நல்லம்மாள். எனக்கும் ஜெயாவிற்கும் 15 வருடங்களுக்கு முன்பாக திருமணம் நடந்தது. எனது மனைவிக்கு ஒரு தம்பி உண்டு. அவர் கடந்த 12 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். எனது மாமனாருக்கு ஆண்பிள்ளை இல்லை என எப்போதும் என் மாமியாரிடம் மறறொரு திருமணம் செய்துகொள்வேன் என என் மாமியாருடன் தகராறு செய்து வந்தார். அடிக்கடி எனது மாமனாருக்கும் மாமியாருக்கும் தகராறு இருந்து வந்தது. இரண்டாவது திருமணம் செய்யவேண்டும் என அடிக்கடி என் மாமனார் என் மாமியாருடன் தகராறு செய்து வந்தார். 31.3.2018ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு நானும் என் மனைவியும் சோளத்தட்டை அறுக்க என் மாமனார் தோட்டமான கோடாங்கிநாயக்கன்பட்டி மலை ஓரத்திற்கு சென்றோம். மேற்படி இடத் ஒரு தோட்டம் ஆகும். அப்போது என் மாமியார் அவரது ஊரான மானூத்து கிராமத்தில் உள்ள கோவில் திருவிழாவிற்கு போகவேண்டுமென என் மாமனாரிடம் அனுமதி கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது எதிரி, அங்கு யார பாக்க போற, எவன பாக்கபோற என்றும் உயிரோடு இருந்தால்தானே போய்வாய் என சொன்னார். பிறகு எதிரி, என் மாமியாரை அருவாளை எடுத்து வெட்டச்சென்றார். அப்போது நானும் என் மனைவி ஜெயாவும் தடுத்தோம். பிறகு சோளத்தட்டையை அறுத்துக்கொண்டு கிராமத்திற்கு

வந்துவிட்டோம்.இதுபோன்று அடிக்கடி மாமனாருக்கும் மாமியாருக்கும் தகராறு நடக்கும். என் மாமியார் 31.3.2018ம் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்புஇதுபோன்று தகராறு செய்து என் மாமியார் அவரது ஊரான மானூத்து கிராமத்திற்கு கோபித்துக்கொண்டு சென்றார். ராசி பண்ணி கூப்பிட்டு வந்தார்கள். அன்று நானும் என் மனைவியும் 31.3.2018ம் தேதி இரவு 7 மணிக்கு கோவிலுக்கு மானூத்துக்சென்றுவந்தோம். எங்கள் ஊரில் இருந்து மானூத்து 3 கி.மீ.தூரம் இருக்கும். சாமி கும்மிட்டுவிட்டு இரவு வீட்டிற்கு திரும்பி வந்து தூங்கிவிட்டோம். மறுநாள் 1.4.2018ம் தேதி காலை 7.30 மணிக்கு நானும் என் மனைவியும் மாடுக்கு சோளத்தட்டை அறுப்பதற்காக மாமனார் தோட்டத்திற்கு சென்றோம். அந்த தோட்ட வீட்டில் பண்னை அருவாள் இருந்தது. அதை எடுக்கச்சென்றபோது, என் மாமியார் நல்லம்மாள் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் இறந்திருந்தார். நானும் என் மனவையும் சத்தம்போட்டபோது அக்கம்பக்கத்து தோட்டத்தில் இருந்த மணிகண்டன், பெரியபாண்டி ஆகியோர்கள் ஓடிவந்து பார்த்தார்கள். என் மாமனார் முன்பே கூறியபடி என் மாமியாரை வெட்டிக்கொன்றுவிட்டதாக தெரிந்துகொண்டேன். இறந்த இடத்தில் என் மாமனார் இல்லாததால் என் மாமனார் தான் என் மாமியாரை சந்தேகத்தால் வெட்டிவிட்டார் என தெரிந்துகொண்டேன். ஏற்கனவே என் மாமியார் என்னிடம் கூறினார். நான் மாமனார் உடன் இருந்தால் என்னை கொலை செய்துவீடுவார் என என் மாமியார் என்னிடம் கூறினார். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு அ.சா.ஆ.1. வழக்குசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.அதன்பின்னர் 2 மாதம் கழித்து நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அதன்பேரில் உசிலம்பட்டி நடுவர் நீதிமன்றத்திற்கு சென்று என் மாமியார் இறந்தது சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தேன். அதனை நீதிபதி அவர்கள் பதிவு செய்து கொண்டார். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் தான் நான் உசிலம்பட்டி நீதிமன்றத்தில் நடுவரிடம் கொடுத்த வாக்குமூலம்ஆகும். அந்த வாக்குமூலம் அ.சா.ஆ.2.

கு.வி.

என் மாமியார் இறந்தகிடந்த தோட்டம் என் மாமனாருக்கும் என் பெரியமாமனார் பெரியபாண்டிக்கும் சொந்தமான பங்கு தோட்டம் என்றால் சரி. எனது மாமனாரும் அவரது அண்ணனும் மேற்படி தோட்டத்தில் உள்ள கிணற்றில் மொய் வைத்து தண்ணீர் பாய்ச்சுவார்கள் என்றால் சரி. அந்த முறை என்பது ஒருநாள்விட்டு ஒருநாள் என் மாமனாரும் என் பெரிய மாமனாரும் அடுத்தடுத்து தண்ணீர் பாய்ச்சுவார்கள். என் மாமனார் தோட்டத்தில் உள்ள முழு விவரம் எனக்கு தெரியும். அந்த கிணற்றிற்கு நேராக கிழக்கில் என் மாமனாருக்கு சொந்தமான ஒரு கொட்டகை உள்ளது என்றால் சரி. அதையொட்டி என் பெரிய மாமனாருக்கு ஒரு கொட்டகை உள்ளது என்றால் சரி. கிணற்றுக்குநேராக மேற்கு பக்கத்தில் தென்னை மரம் உள்ளது என்றால் சரி. கிணற்றிற்கு நேராக கிழக்கு பக்கம் ஒரு தென்னை மரம் உள்ளது என்றால் சரி. மேற்கு ஒட்டி வடக்கு பக்கம் எலுமிச்சைமரம் உள்ளது என்றால் சரி. தோட்டம் மலையடிவாரத்தில் உள்ளது என்றால் சரி. எனக்கு அந்த தோட்டத்திற்கு மேற்கு பக்கமாக எனக்கு அப்பாவுக்கு சொந்தமான நிலம் இருந்தது. அதை நான் விற்றுவிட்டேன் என்றால் சரி. என் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள் மூனறுபேர்கள். மானூத்தில் உள்ள லோகராணி என் மாமியாருக்கு கூடபிறந்த

அக்காள் மகள் ஆவார் என்றால் சரி. மானூத்தில் உள்ள அறிவழகன் என் மாமியாருக்கு சொந்த அண்ணன் மகன் என்றால் சரி. மானூத்தில் உள்ள ராஜபிரபு என் மாமியாருக்கு மற்றொரு அண்ணன் மகன் என்றால் சரி. என் மாமியார் பிறந்தது மானூத்து. வாழ்க்கைபட்டது கோடாங்கிநாயக்கன்பட்டி. புகாரை பக்கத்தில் உள்ளவர்கள் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொடுத்தார்கள்.அவர்கள் வாசித்து காண்பித்தார்கள். அதில் நான் கையெழுத்துபோட்டேன். நான் சொல்ல சொல்ல டைப் அடித்துக்கொண்டார்கள். நான் கொடுத்த மனு காவல்நிலையத்தில் போலிசார் நான் சொல்ல சொல்ல தட்டச்சு செய்து கொண்டார்கள். புகார் கொடுக்கச்சென்றபோது என் மனைவியும் என் உடன் வந்தார். நான் கொடுத்த புகாரில் என் மனைவிடமும் சாட்சியாக கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரி. எனது மாமியார் இறந்திருந்து புகார் கொடுக்கும்போதே யார் மீதாவது சந்தேகப்பட்டு புகார் கொடுத்தீர்களா என்றால் என் மாமனார் மீது சந்தேகப்பட்டுதான் புகார் கொடுத்தேன். நான் என் மாமனார் என் மாமியாரை கொன்றதை நேரடியாக பார்க்கவில்லை. நான் போலிசார் விசாரணையிலும் என் மாமியாரை என் மாமனார் கொன்றதை நேரடியாக பார்க்கவில்லை என்றுதான் கூறினேன். என் மாமனார் தோட்டத்திற்கு வடக்கே ஒரு பெரிய ஓடை செல்கிறது என்றால் சரி. தெற்கு பக்கம் தண்ணீர் ஓடை உள்ளது என்றும் அதில் மழை தண்ணீர் ஓடும் என்றால் சரி. 31.3.2018ம் தேதி அன்று என் மாமனாருக்கும் மாமியாருக்கும் நடந்த தகராறை என் பெரிய மாமனாரிடம் நான் சொல்லவில்லை. என் மாமனார் தோட்டத்திற்கு அருகில் உள்ள மணிகண்டனிடம் என் மாமனார் என் மாமியாரை வெட்ட வந்த விவரத்தை சொன்னேன். என் மாமனார் தோட்டத்தை சுற்றி நிறைய தோட்டங்கள் உள்ளது. மணிகண்டன் தோட்டத்தின் வரம்பு தொளியில் தான் என் மாமனார் தோட்டம் உள்ளது என்றால் சரி. மணிகண்டன் தோட்டத்தில் வீடு கட்டி, ஆடு, மாடு, நாய் வளர்த்து வருகிறார்கள் என்றால் சரி. அவர்கள் அனைவரும் குடும்பத்துடன் தங்கி வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வப்போது வந்து போவார்கள். எனக்கு வயது 40. என் மாமியார் இறக்கும்போது அவருக்கு வயது 56 இருக்கும். என் மாமனாருக்கு வயது 62 இருக்கும். 31.3.2018ம் தேதி கோவிலுக்கு சென்றுவிட்டு வந்து என் மாமியாரை காணவில்லை என தேடவில்லை. கோவிலுக்கு போய்விட்டு வரவே இரவு 9, 9.30 மணி ஆகிவிட்டது. என் மாமியாரை தேடவில்லை என்றால் மறுநாள் காலை என் மாமியாரை சென்றுபார்த்தபோது என் மாமியார் இறந்திருந்தார். 31.3.2018ம் தேதி நான் கோவிலுக்கு செல்லவில்லை என்றும், ஊரில் தான்இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் 1.4.2018ம் தேதி தோட்டத்தில் சென்று பார்த்தபோது என் மாமனார் அங்கு இல்லை. எங்கிருந்தார் என தெரியவில்லை. என் மாமியார் இறந்தபிறகு என் மாமனாரை நான் சொத்தை எழுதி கொடுக்கச்சொல்லி துன்புறுத்தி, அதன்பேரில் எழுமலை காவல்நிலையத்தில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சொத்து கேட்டு துன்புறத்தவில்லை. அந்த குற்ற எண்.273/2018 ஆகும். வழக்கை ஒத்துக்கொண்டு நானும் என் மனைவியும் தலா ரூ-2000/- அபராதம் செலுத்தினோம் என்று சொன்னால் சரி. நான் 9ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எழுத்து வராது. பிழை வரும். படிக்க தெரியும். நான் என் மாமனாரை அடித்தது உண்மை. ஆனால் சொத்து கேட்டு அடிக்கவில்லை. என் மாமியார் இறந்தபின்னர் சொத்து

கேட்டு என் மாமனாரை அடித்ததில் அவர் மருத்துவமனையில் இருந்தார் என்றும், அதன்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அதனை ஒத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. சொத்தை எழுதிக்கொடுக்கும்படி என் மாமியாரிடம் அடிக்கடி சண்டைபோட்டு வந்தேன் என்றால் சரியல்ல. எனக்குகுடிபழக்கம் உண்டு என்றால் சரியல்ல. என் மைத்துனர் இறந்தபின்னர் என் மாமியாரிடம் மாமனாரிடம் சொத்தை விற்றுக்கொடுக்கும்படியும், அதனை வைத்து உசிலம்பட்டியில் கடைவைத்துக்கொள்கிறேன் என கேட்டதாகவும், நான் குடிகாரன் என்பதால் என் மாமியாரும் என் மாமனாரும் சொத்தை கொடுக்கவில்லை என்றும், நான், என் தம்பியம்சேர்ந்து என் மாமியாரை கொலை செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. என் மாமியார் இறந்துபின்னர் தொடர்ந்து சொத்தை கேட்டு தகராறு செய்துவந்ததால் என் மாமனார் என் மீதும் என் மனைவி மீதும் வழக்கு தொடர்ந்தார் என்றால் சரியல்ல. என் மாமனார் இந்த வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் சரண்டர் ஆன விவரம் எனக்கு தெரியாது. என் மாமியார் இறந்துகிடந்த இடத்தில் என் மாமனாரின் இரத்தம்படிந்த வேட்டியும் சட்டையும் தொங்கிக்கொண்டிருந்தது என்றால் சரி. நான் பதட்டமாக இருந்தபடியால் அருவாள் எங்கிருந்தது என பார்க்கவில்லை. நான் பார்க்கும்பபோது என் மாமியார் கொட்டத்து மண்ணில் தான் படுத்திருந்தார். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபின்னர் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து என்னென்ன நடந்தது என பார்த்தார்கள். என்னையும் என் மனைவியும் விசாரித்தார்கள். அப்போது மணிகண்டனையும், பெரியபாண்டியையும் விசாரித்தார்கள். என் மாமனாரை 2.4.2019ம் தேதி கைது செய்து காவல்நிலையத்தில் வைத்தார்கள். போலிசார் மோப்பநாயுடன் வந்து சம்பவ இட்த்தை பார்வையிட்டு மற்ற இடத்திற்கெல்லாம் போலிஸ் நாயை அழைத்து சென்றார்கள். அந்த மோப்பநாய் என் மாமனார் சென்ற இடத்திற்கெல்லாம் சென்றது என்றால் சரி. சம்பவயிடத்தில் என் மாமியாரை பார்த்தபோது மேற்படி இடத்தில் சுமார் 30 பேர்கள் இருந்தார்கள். அவர்களை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரி. விசாரணையின்போது மல்லிகைதோட்டத்திற்கு அருகில் இருந்த சீமை புல் அருகில் இருந்த அருவாளை மோப்ப நாய் அடையாளம் காட்டி எடுததுக்கொடுத்ததை போலிசார் கைப்பற்றினார்கள் என்றால் சரி. 1.4.2018ம் தேதி காலை 9.00 மணிக்கு விஏ.ஓ , தலையாரி சம்பவயிடத்திற்கு வந்துவீட்டார்கள் என்று சொன்னால் சரி. போலிசார், விஏஓ, தலையாரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரி. இந்தவழக்கிற்கும் என் மாமனாருக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றும், நான் தான் என் மாமனாரிடம் சொத்து கேட்டுதகராறு செய்து என் தம்பியின் உதவியுடன் என் மாமியாரை கொலை செய்தவிட்டு எதிரி மீது தவறான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. 31.3.2018ம் தேதி நடந்த என் மாமனார், என் மாமியாரை வெட்டவந்ததாக நான் காவல்நிலையத்தில் புகாகர் கொடுக்கவில்லை. பலமுறைஇதுபோன்று சம்பவம் நடந்தபடியால் கொடுக்கவில்லை. பலமுறை சம்பவம் நடந்தபோது ஏதாவது ஒரு முறை புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. இது சம்பந்தமாக எங்கள் கிராமத்தில் பஞ்சாயத்து வைத்து என் மாமியாரையும், மாமனாரையும் இரண்டு பேர்கள் விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் பஞ்சாயத்து ஏற்கனவே நடந்த விவரத்தை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

நான் சொல்வதுபோல் பஞ்சாயத்துஎதுவும் நடக்கவில்லை என்றும், உண்மைக்கு புறம்பாக நான் சாட்சி சொல்கிறேன் என்றும், என் மாமியாரும், மாமனாரும் சந்தோசமாக தான் இருந்தார்கள் என்றும், நான் சொல்வது அனைத்தும் பொய் என்றாலும் சரியல்ல. போலிசார் என் மாமனார் என் மாமினாரை வெட்டிய அருவாளை காண்பிக்கவில்லை. பண்னை அருவாள் அந்த இரத்தத்தில் விழுந்து கிடந்தது. 31.3.2018ம் தேதி என் மாமியார், மாமனார் தோட்டத்திற்கு சென்றபோது சாப்பாடு எடுத்துச்சென்றார்கள் என்றால் சரி. சாப்பாட்டு பாத்திரத்தை கொட்டகையில் தான் வைப்பார்கள் என்றால் சரி. மறுநாள் நான் போய் பார்த்தபோது சாப்பாடு பாத்திரம், தட்டு ஆகியவைகள் இரத்ததில் சிதறி இருந்தது என்றால கழுவும் இடத்தில் இருந்தது. சட்டியை போலிசார் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. பிறகு சம்பவம் நடந்து 2 மாதம் கழித்து போலிசார் என்னிடம் புகாரில் சொல்லியவாறே நீதிமன்றத்தில் சொல்லவேண்டும் எனற அழைத்துசென்றார்கள் என்றால் போலிசார் என்னைஅழைத்து செல்லவில்லை. போலிசார் நீதிமன்றத்திற்கு வரும்படி தகவல் மட்டும் கொடுத்தார்கள். நான் நீதிமன்றத்திற்கு சென்றேன். நீதிமன்றத்திற்கு வரச்சொன்னார்கள். நான் நீதிமன்றத்திற்கு சென்றேன். நான் காலை 8 மணிக்கு நீதிமன்றத்திற்கு சென்றேன். 12.30 மணிக்கு நீதிபதி பதிவுசெய்தார்கள். நான், லோகராணி, அறிவழகன் ஆகியோர்கள் சென்றோம். எழுமலை போலிசார் யாராவது வந்தார்களா என்றால் வரவில்லை. நான் நீதிபதி அவர்களிடம் கூறியவற்றை தான் லோகராணி நீதிபதி அவர்களிடம் கூறினார் என்றால் சரி. லோகராணி மானூத்தில் வசிக்கிறார் என்றால் சரி. போலிசார் என்னையும் லோகராணி,அறிவழகன் ஆகியோர்களை நீதிமன்றத்திற்கு போகும்படி சொன்னார்கள். நாங்கள் சென்றோம். நீதிமன்றத்தில் இருப்பவர்கள் வழக்கை கூப்பிடுவார்கள் என்று சொன்னார்கள்.அதனால் நாங்கள் நீதிமன்றத்தில் இருந்தோம். நீதிமன்றத்தில் நாங்கள் கூறிய வாக்குமூலத்தை இந்த மாதிரி தட்டச்சு செய்தார்கள். 2 மாதம் கழித்து உண்மை தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் நான் செய்த கொலையை மறைப்பதற்காக நானாக நீதிமன்றம் சென்றேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் என் மாமியார் கொலை செய்யப்பட்ட சாவின்மீது சந்தேகம் உள்ளது என்றால் சரியல்ல. என் மாமனார் தான் கொலை செய்தார் என வாக்குமூலம் கொடுத்தேன். அதனை நீதிபதி பதிவு செய்தார். போலிசார்கேட்டுக்கொண்டதன்பேரில் தான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் மாமியாரை நானே கொலை செய்துவிட்டு என் மாமனார் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம். இளையராஜா

ஒப்பம். எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 2 FOR PROSECUTION..

Name : ஜெயா

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி

நான் உசிலம்பட்டி தாலுகா, கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். அ.சா.1 என் கணவர்.ஆஜர் எதிரி என் அப்பா. இறந்துபோனவர் என் அம்மா. .அசா.1 என் கணவர். என் உடன் பிறந்தவர் என் தம்பி. அவர் 12 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் அடிக்கடி சண்டை வரும். அடிக்கடி என் அப்பா, எனது அம்மாவிடம் எனக்கு பெண் பார்த்து கல்யாணம் செய்து வை என சண்டை போடுவார். எனக்கு ஆண் வாரிசு வேண்டும் என்று கூறிவந்தார். வேறு பெண்ணை பார்த்து திருமணம் செய்து வை என அடிக்கடி தகராறு செய்து வந்தார். அதனால் என் அம்மா சம்பவத்திற்கு இரண்டு வாரத்திற்கு முன்பாக கோபித்துக்கொண்டு மானூத்து-ல் உள்ள தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். முத்துக்காளை , குபேந்திரன் ஆகியோர்கள் பஞ்சாயத்து பண்ணி என் அம்மாவை மானூத்தில்இருந்து கோடாங்கிநாயக்கன்பட்டிக்கு அழைத்து வந்தார்கள். 31.3.2018 ம தேதி மதியம் 12 மணிக்கு சோளத்தட்டை அறுக்க நானும் என் கணவரும் என் அப்பா விட்டு தோட்டத்திற்கு

போனோம். ஊருக்கு போகக்கூடாது என என் அப்பா, என் அம்மாவுடன் சண்டைபோட்டார். ஊருக்கு போனால் நான் கொன்றுவிடுவேன், நீ உயிருடன் இருந்தால்தானே ஊருக்குபோவாய் என சொல்லி என் அம்மாவின் கழுத்தை நெறிக்க வந்தார். அருவாளால் வெட்ட வந்தார். நானும் என் கணவரும் விலக்கிவிட்டோம். சம்பவத்திற்கு முன்பு என் அம்மா நான் கூப்பிட்டு கூட வரவில்லை.. பஞ்சாயத்தார்கள் கூப்பிட்டு தான் மானூத்தில் இருந்து கோடாங்கிநாயக்கன்பட்டிக்கு வந்தார். நாங்கள் 31.3.2018ம் தேதி மதியம் 2.00 மணிக்கு மானூத்து கோவிலுக்கு சென்று இரவு தான் கோடாங்கிநாயக்கன்பட்டிக்கு வந்தோம். 1.4.2018ம் தேதிவிடியற்காலை வீட்டில் இருந்து 7 மணிக்கு கிளம்பி 7.30 மணிக்கு என் அப்பா வீட்டு தோட்டத்திற்கு சென்றோம். நானும் என் வீட்டுக்காரரும் சேர்ந்து சென்றோம். என் அம்மாவின் உடல் மேல் பாய் போடப்பட்டிருந்தது. மல்லாக்க படுத்திருந்தார். ஸ்பிரையர் மேல் கழுத்து வைத்து படுத்திருந்தது. என் அம்மாவிற்கு கழுத்தில் வெட்டுக்காயம் இருந்தது. சாட்சி தற்போது சொல்கிறார் அறுக்கப்பட்டிருந்தது. என்று. பின்னர் காவல்நிலையத்திற்கு சென்று ரிப்போர்ட் கொடுக்க போனோம். புகாரில் இளையராஜா கையெழுத்து போட்டுக் கொடுத்தார். பிறகு 9 மணிக்கு நான் காட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

கு.வி.

31.3.2018ம் தேதி நானும் என் கணவரும் தோட்டத்திற்கு செல்வதற்கு முன்னரே, என் அம்மாவும் அப்பாவும் தோட்டத்திற்கு வந்துவிட்டார்கள். வெள்ளனவே வந்துவிட்டார்கள். காலை 11,11.30 மணி வாக்கில் நானும் என் கணவரும் காட்டிற்கு சென்றோம். நாங்கள் காட்டிற்கு சென்றபோது என் அம்மா, அப்பா சண்டைபோடவில்லை.மேற்படி தோட்டம் எனது அப்பாவிற்கும் பெரியப்பாவிற்கும் பங்கு தோட்டம் ஆகும். என் பெரியப்பாவிடம் நாங்கள் எதுவும் கூறவில்லை. என் அம்மா ரோசக்காரி. என் அம்மா ஒரு பஞ்சாயத்தில் சுண்டுவிரலை வெட்டிக்கொண்டார் என்று சொன்னால் சரி. 1.4.2018ம் தேதி காலை 9 மணிக்குமானூத்தில் இருந்து ஊர் ஆட்கள் வந்துவிட்டார்கள். கூட எவ்வளவு பேர்கள் வந்தார்கள் என நான் அளந்து பார்க்கவில்லை. ஆனால் ஊர்காரர்கள் நிறைய பேர்கள் இருந்தார்கள். மானூத்தில்

இருந்து லோகராணி, அறிவழகன் வந்தார்கள். காலை 9 மணிக்கு போலிசார் வந்தார்கள். என் மாமா மகன் ராஜபிரபுவும் வந்திருந்தார். போலிசார் வந்திருந்தபோது விஏஓ, தலையாரி இருந்தார்களா என நான் சரியாக கவனிக்கவில்லை. அதிர்ச்சியில் அழுதுகொண்டிருநதேன். என் அம்மா ஸ்பிரையர் மேல் தலையை வைத்து படுத்திருந்தார்.அந்த ஸ்பிரையர் எல்லாம் ரத்தமாக இருந்தது. நானும் என் கணவரும் 20 நாட்கள் கழித்து தான் கழுவினோம். நான் மானூத்தில் இருநது இரவு 10 மணிக்கு தான் வந்தோம். என் அம்மா வீட்டிற்கு சென்று பார்த்தேன். கதவு பூட்டியிருந்தது. காலையில் தான் 7 மணிக்கு காட்டிற்கு சென்று பார்த்தேன். நான் அதிர்ச்சியில் இருந்ததால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் கணவரைதான் விசாரித்தார்கள். அதனை சம்பவயிடத்திலேயே வாக்குமூலம் லேப்டாப்பில் பதிவு செய்தார்கள்.அதுபோல் லோகராணிட, அறிவழகன் ஆகியோர்களை போலிசார் விசாரித்து டைப் அடித்தார்களா என்றால் அவர்கள்ஊருக்கு போய்விட்டார்கள்நான் பார்க்கவில்லை. ராஜபிரவுவும் சேர்ந்து ஊருக்கு சென்றுவிட்டார். என் அம்மாவை பார்த்துவிட்டு லோகராணி,அறிவழகன், ராஜபிரபு போகும்போது 10.00 மணி இருக்கும். 108 ஆம்புலன்ஸ் காலை 9 .30 மணிக்கு வந்துவிட்டது. 108 ஆம்புலன்ஸ்-க்கு இன்ஸ்பெக்டர் போன் செய்தார். இறந்துபோன அம்மாவின் பிரேதத்தை ஆம்புலன்ஸ்-ல் ஏற்றி பகல் 11.00 மணிக்குகிளம்பினார்கள். 108 ஆம்புலன்ஸ்-ல் என் அம்மாவை 2 போலிசார் மற்றும் எங்கள் ஊர்காரர்கள் இருவர் சேர்ந்து தூக்கி வைத்தார்கள். போலிசார் விசாரணையில் 108 ஆம்புலன்ஸ்-ல் என் அம்மாவை தூக்கி வைத்துக்கொண்டு சென்ற விவரத்தை நான் சொன்னேனா என்றால் என்னை விசாரிக்கவேயில்லை. ஸ்பிரையருக்கு பக்கத்தில் சாப்பாடு கொண்டு சென்ற பாத்திர, பண்டம் இருந்ததா என்றால் அதனை நான் கவனிக்கவில்லை. என் அம்மா இறந்த கிடந்த இடத்தில் என் அப்பா இல்லை. ஊரிலும் இல்லை. காட்டிலும் இல்லை. எழுமலை போலிஸ்ஸ்டேசனில் என் அப்பாவை 2 மணிக்கு கைது செய்து வைத்திருக்கிறார்கள் என ஊர்காரர்கள் சொன்னார்கள். என் அம்மா இறந்த கிடந்த இடத்தில் சுவற்றில் இரத்தம் இருந்ததா என்றால் தரையில் மட்டும் இரத்தம் இருந்தது. போலிசார் 9.00 மணிக்கு இரத்தம்பட்ட மண்ணையும், இரத்தம்படாத மண்ணையும் எடுத்து பேப்பரில் வைத்துக்கொண்டார்கள். வீட்டில் இருந்த பண்ட

பாத்திரங்களில் இரத்தம் எதுவும் இல்லை. மோப்ப நாய் வந்ததா என நான் பார்க்கவில்லை. அறிவழகன், லோகராணி, ராஜபிரபு ஆகீயோர்களை போலிசார் 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். என் அம்மா இறந்தபிறகு, சொத்தை எழுதிகொடு என என் அப்பாவை அடித்ததால் என் அப்பா வழக்கு கொடுத்து அது சம்பந்தமாக உசிலம்பட்டி நீதிமன்றத்தில் நானும் என் கணவரும் தண்ட தொகை கட்டினோம் என்றால் சொத்திற்காக நாங்கள் என் அப்பாவை அடிக்கவில்லை. நான என் அம்மாவை கொன்ன வேதனையை தாங்கமாட்டாமல்தான் என் அப்பாவை அடித்தேன் என கூறினேன். என் அம்மா இறப்பதற்கு முன்பு, என் அம்மாவிடம் சொத்தை விற்றுக்கொடு உசிலம்பட்டி கடை வைக்கமேபாகிறேன் என்று கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா, என் அப்பாதான் எனக்காக சம்பாதித்தார்கள். நான் ஒரே ஒரு பெண்பிள்ளைதான்.சொத்தை கொடுக்காததால் எனது வீட்டுக்காரரும் அவரது தம்பியும் சேர்ந்து தான் என் அம்மாவை கொன்றுவிட்டார்கள் என்றும், என் கணவரை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் அம்மாவிடம் , என் அப்பா அடிக்கிறார் , பஞ்சாயத்து வைக்கும்படி கூறினேன். என் அம்மா அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டார். நான் சொன்னமாதிரி இந்த வழக்கிற்கும் என் அப்பாவிற்கும் சம்மந்தமில்லை என்றும், என் கணவர் தான் சொத்திற்காக ஆசைப்பட்டு என் அம்மாவை கொன்றுவிட்டார் என்றும், நான் என் கணவரை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம். ஜெயா
ஒப்பம். எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 3 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : மணிகண்டன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

நான் கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். எனது தோட்டம் எங்கள் ஊருக்கு வடக்கே மலையடிவாரத்தில் இருக்கிறது. விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 இளையராஜபா, அ.சா.2 ஜெயாஆகியோர்களை எனக்கு தெரியும். பொதுவாக அ.சா.2 தங்கச்சி முறை வேண்டும. எதிரியை தெரியும். இறந்துபோன நல்லம்மாவை தெரியும். நல்லம்மாள் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக இளையராஜா நல்லம்மாள் இறந்துவீட்டதா காலை 7-8 மணிக்கு வந்து சொன்னார். எதிரியின் தோட்டத்திற்கு அருகில் தான் என் தோட்டம் இருக்கிறது- நான் சென்றுபார்த்தபோது நல்லம்மாள் தோட்டத்து வீட்டில் உள்ள ஒரு அறையில் இறந்துகிடந்தார். நான் கிட்டபோய் பார்க்கவில்லை. சம்பவயிடத்தில் எதிரியை நான் பார்க்கவில்லை. நல்லம்மாள் எப்படி எதனால் இறந்தார் என நான் எதுவும் கேள்விப்படவில்லை. நான் ஊரில் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதீ கு.வி.செய்ய அனுமதி கோரி அனுமதி வழஙகப்பட்டது.

அரசு தரப்பில் கு.வி.

போலிசார் விசாரணையில் கடந்த 31.3.2018ம் தேதி மதியம் 12.00 மணிளளவில் சின்னப்பாண்டி மற்றும் அவரது மனைவி, மகள், மருமகன் ஆகியோர்கள் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது சின்னப்பாண்டியும் நல்லம்மாளும் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தானும், சின்னபாண்டியின் அண்ணன் பெரியபாண்டியும் சென்று இருவரையும் சத்தம்போட்டு, விலக்கிவிட்டு என்னசென்று விசாரித்தபோது, நல்லம்மாள்,அவரது ஊரான மானூரதது கிராமத்தில் கோவில் திருவிழாவிற்கு போய்விட்டு வருவதாக சின்னப்பாண்டியிடம் கேட்டதாகவும்,அதற்கு சின்னப்பாண்டி அவரது மனைவியை பார்த்து, நீ மானூத்தில் எவனடி பார்க்க போற என தப்பாக பேசியதாகவும், மேலும் நீ உயிருடன் இருந்தால்த்ானே நாளைக்கு ஊருக்குப்போவாய் உன்னை பார்த்துக்கொள்கிறேன் என கூறி திட்டி கழுத்தை பிடித்து நெறித்தகாவும், அவரது மருமகனும், மகளும் சொன்னார்கள் என்றும், பின் தான் தோட்டத்தில் வேலை செய்துவிட்டு உட்கார்ந்திருந்தபோது மதியம் 3 மணிக்கு சின்னப்பாண்டி பதட்டத்துடன் வரப்பு வழியாக மலையடிவாரம் நோக்கி சென்றுகொண்டிருந்தவரை, நான் என்னப்பா இப்படி வெய்யிலில் போகிறாய் என கேட்டபோது பதில் சொல்லாமல் சென்றுவிட்டார் என்றும், தானும் ஒன்றும் சொல்லவில்லை என்றும், பின் சாயங்காலம் எப்போதும் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருப்பவர்களை அன்றைய தினம் காணவில்லை என்றும், பின் 1.4.2018ம் தேதி நல்லம்மாள் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் இறந்துகிடந்தார் என்றும், சின்னப்பாண்டி, நல்லம்மாளை வெட்டி கொலை செய்துவிட்டுதான் தன் தோட்டத்தின் வழியாக மலையடிவடிவாரம் ஒட்டி சென்றதாக தெரியவந்தது என்றும் கூறிவிட்டு, தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

கு.வி. எதிரி தரப்பில்- ஒன்றுமில்லை.

ஒப்பம். இளையராஜா
ஒப்பம். எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 4 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : பெரியபாண்டி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

நான் கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அவர் என் உடன்பிறந்த தம்பி. இறந்துபோன நல்லம்மாள் என் தம்பி மனைவி. அ.சா.1 முதல் 3 ஆகியோர்களை தெரியும். நானும், எதிரியும் சேர்ந்து தான் விவசாயம் செய்கிறோம். எங்கள் இருவருக்கும் பங்கு நிலமாகும். நல்லம்மாள் இறந்த அன்று நான் கண் ஆப்பரேசனுக்காக நாகர்கோவில் சென்றுவிட்டேன். மறுநாள் மாலை 5.00 மணிக்கு வந்தேன். நல்லம்மாள் எப்படி எதனால் இறந்தார் என்று எனக்கு தெரியாது.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதீ கு.வி.செய்ய அனுமதி கோரி அனுமதி வழஙகப்பட்டது.

அரசு தரப்பில் கு.வி.

போலிசார் விசாரணையில் எனது தம்பியும் தம்பி மனைவியும் அடிக்கடி சண்டைபோடுவார்கள் என்றும், தன் தம்பி அவரது மனைவியை சந்தேகப்பட்டு அடிப்பதும். சந்தேகமாக போசுவதும் ஆக இருந்து

வந்தார் என்றும், 31.3.2018ம் தேதி தன் தம்பி, அவரது மனைவி, மருமகன், மகள் ஆகியோர்கள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது தன் தம்பிக்கும்,அவரது மனைவிக்கும் சண்டை போட்டுக்கொண்டிருப்பதுகண்டு மனது கேட்காமல் தானும், மணிகண்டனும் சென்று சத்தம்போட்டு விலுக்கி விட்டதாகவும், விசாரிக்கும்போது, நல்லம்மாள் மானூத்துக்கு சாமி கும்பிடவோய் வருகிறேன் என்று கேட்டதாகவும், அதற்கு தன் தம்பி, மானூத்து எவனை பார்க்க போகிறாய் என்று சத்தப்பாகபேசியமாகவும், நீ உயிருடுன் ருந்தால்தானே நாளைக்கு ஊருக்கு போவாய் உன்னை பார்த்துக்கொள்கிறேன் என்று திட்டி கழுத்தை பிடித்து நெறித்ததாகவும் அவரது மகள்,மருமகன் சொன்னார்கள் என்றும், மறுநாள் 1.4.2018ம் தேதி தான் தனது தோட்டத்திற்கு சென்றபோது தன் தம்பியின் மகளும் மருமகனும் அலறி சத்தம்போட்டதை கேள்வி தானும், மணிகண்டனும் ஓடிசென்று பார்த்தபோது அங்குள்ள தோட்ட வீட்டில் தன் தம்பி மனைவி நல்லம்மாள் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் இறந்திருந்தார் என்றும், தன் தம்பி நல்லம்மாள் நடத்தை சந்தேகப்பட்டு வந்தபடியால் வெட்டி கொலை செய்துவிட்டார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் தம்பியை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

கு.வி. எதிரி தரப்பில்- ஒன்றுமில்லை.

ஒப்பம். பெரியபாண்டி

ஒப்பம். ளளள, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 5 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : லோகராணி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

நான் மானூத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் சித்தி நல்லம்மாளின் கணவர். அ.சா.1 முதல் 4 ஆகியோர்களை தெரியும்.என் சித்தி நல்லம்மாள் இறப்பதற்கு முன்பு சுமார் 10, 15 நாட்களுக்கு முன்பு பங்குனி முதல் தேதியில் எங்கள் வீட்டிற்கு கோபித்துக்கொண்டு வந்திருந்தார். எதற்கு என்று விசாரித்தபோது, எதிரி அடிக்கடி சந்தேகப்பட்டு பேசுவதாக கூறினார். இளையதாரம் கட்டவேண்டும், நீ உயிரோடு இருந்தால் நான் 2-வது திருமணம் செய்யமுடியாது. என்றும் நீ உயிருரோடு இருந்தால்தானே மானூத்து போவாய் என்றும், எனக்கு 2-வது திருமணம் செய்து வைக்கும்படி தொந்தரவு செய்துவந்தார் என்றும், இனிமேல் மானூத்தில் இருந்துபோகவே மாட்டேன் என கூறிவந்தார்.முதலில் என் சித்தியும் சித்தி மகளும் வந்தார்கள். விடமாட்டோம் என சொல்லிவிட்டோம். பின்னர் எதிரி வந்து என்னடி யாரை பார்க்க வந்த எனஅசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். நாங்கள் அனுப்ப மாட்டோம் என கூறிவிட்டோம். பின்னர் 3-வதாக

ஊர்பெரியாட்களை கூட்டிக்கொண்டு தன் சித்தி மகள், குபேந்திரன், முத்துக்காளை ஆகியோர்கள் வந்து புருஷன், பெண்டாட்டி சண்டை, அனுப்பி வையுங்கள் என கூறினார்கள். என் சித்தி போகவே மாட்டேன் என சொன்னார். பின்னர் என் சித்தி, பெரியவர்கள் வந்து கூப்பிட்டதால் அதற்காகவது சென்றுவருகிறேன் என்ற சொல்லியது. எங்கள் ஊரில் கோவில் விழா அதனை முடித்துவிட்டு அனுப்பி வைக்கிறோம் என கூறியதற்கு எதிரி கோவில் திருவிழாவிற்கு அனுப்பி வைக்கிறேன் என்று கூறினார். எனவே என் சித்தியை கோடாங்கிநாயக்கன்பட்டிக்கு அனுப்பி வைத்தோம். கோவில் திருவிழா அன்று என் சித்தியின் மருமகன் இளையராஜா, மகள் ஜெயா, சித்தி பேரன் ஆகியோர்கள் வந்தார்கள். அம்மா எங்கே என கேட்டதற்கு பின்னால் வருவார்கள் என்று 31.3.2018ம் தேதி அ.சா.2 என்னிடம் கூறினார். அப்புறம் என் சித்தி வரவேயில்லை. மறுநாள் காலை நாங்கள் கறி அறுத்துக்கொண்டிருக்கும்போது , என் சித்தி மகள் அ.சா.2 1.4.2018ம் தேதி காலை 8 மணிக்கு மேல் என் மாமா மனைவி புஷ்பத்திற்கு போன் மூலம் தொடர்பு கொண்டு என் அம்மாவை சங்கை அறுத்து என் அப்பா கொலை செய்துவிட்டார் என கூறினார். அன்றைய தினம் பொஙகல் விழா என்பதால் 10, 20பேர்கள் சென்று பார்த்தோம். பார்த்துவீட்டு வெளியில் வந்து நின்றுகொண்டிருந்தோம். சிறிதுநேரம் கழித்து போலிசார் வந்தார்கள். ஸ்டெச்சரில் வைத்து தூக்கி கொண்டுபோய்விட்டார்கள். நான் சென்றுபார்த்தபோது என் சித்தி கழுத்து அறுபட்ட நிலையில் இறந்துகிடந்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு உ2, 3 மாதங்கள் கழித்து உசிலம்பட்டி நீதிமன்றத்திற்கு சென்று இது சம்பந்தமாக சாட்சியம் அளிக்கிறேன். வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த வாக்குமூலம் அ.சா.ஆ.3.

கு.வி. எதிரி தரப்பில்

போலிசார் விசாரணையில் தன் சித்தி இறந்த விசயத்தை அ.சா.2 புஷபத்திடம் கூறி புஷ்பம் தான் தனக்குசொன்னது என்று கூறவில்லை. காலை 8 மணிக்கு எங்களுக்கு போன் மூலம் தகவல் வந்தது. உடனே 9 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றுவிட்டோம். நாங்கள் சென்றபோது ஊர்காரர்கள் சம்பவ

இடத்தில் இருந்தார்கள் என்றால் சரி. நாங்கள் சென்ற கால்மணிநேரத்தில் போலிசார்சம்பவயிடத்திற்-கு வந்துவிட்டார்கள். போலிசார் வந்தவுடன் என்னை விசாரித்து வாக்குமூலம் எழுதி வாங்கிக்கொண்டார்கள்.எங்கள் ஊரில் இருநது வந்தவர்களில் அறிவழகனும் எங்களுடன் வந்தார். ராஜபிரபு எங்களுடன் வரவில்லை- ராஜபிரபு, அறிவழகன் ஆகியோர்கள் நாங்கள் போவதற்கு முன்னரே இரு சக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். வர்களை போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்களா என எனக்கு தெரியாது. போலிசார் நீதிமன்றத்திற்கு சென்று சாட்சி சொல்லவேண்டுமென்று கூறினார்கள். அதன்பேரில் உசிலம்பட்டி நீதிமன்றத்திற்கு சென்று சாட்சி சொன்னோம். போலிசார் மானூத்திற்கு வந்து என்னை நீதிமன்றத்திற்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் சரி. போலிசார் என்னிடம் நீதிபதி விசாரிப்பார்கள் இதுபோன்று சொல்லவேண்டுமென என்னிடம் -கூறவில்லை. சம்பவயிடத்தில் இருந்து 108 ஆம்புலன்ஸ்-டக்கு யார் போன் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது- நான் போய் என் சித்தியை போய் பார்த்தபோது தரையில் படுத்திருந்தார்கள். அதன்மேல் பாய் போர்த்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் எங்களை பார்க்கவிடவில்லை. நான் பாயை திறந்துபார்க்கவில்லை என்றால் மூஞ்சியைபோர்த்தவில்லை. உடம்பை மட்டும் தான் பாயால் போர்த்தியிருந்தார்கள். பஞ்சாயத்துகாரர்கள் பெயர் எனக்கு தெரியாது என்றால் ஒருவர் பெயர் குபேந்திரன். மற்றொருவர் பெயர் ஞாபகமில்லை. எங்கள் ஊரில் எங்கள் ஜாதியில் பஞ்சாயத்தார்கள் உள்ளார்கள் என்றால் சரி. எங்கள் ஊர்காரர்கள் யாரும் ஏன் இப்படி அடிக்கிற என கேட்டவில்லை. பக்கத்த வீட்டுகாரர்கள் கேட்டார்கள். ஏன் இப்படி நல்லம்மாளை அடிக்கிறீர்கள் என்று கேட்டார்கள். மேற்படி விசயத்தை போலிசார் விசாரணையில் நான் கூறவில்லை. நான்சொன்ன மாதிரி என் சித்தி கோபித்துக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து தங்கியிருந்தது என்றும், கோடாங்கநியாக்கன்பட்டியில் இருந்து ஆட்கள் வந்து பஞ்சாயத்து செய்து கூட்டிசெல்லவில்லை என்றும், என் சித்தி மருமகன் தான் என் சித்தியை கொன்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. உசிலம்பட்டி நீதிமன்றத்தில், அ.சா.2, புஷ்பத்திற்கு தகவல் சொல்லி, எங்கள் ஊர்காரர்கள் பஞ்சாயத்து

செய்தார்கள் என்றோ, அக்கம்பக்த்துகாரர்கள் பஞ்சாயத்து செய்தார்கள் என்று நான் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கூறவில்லை. இநத் வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி இல்லை

ஒப்பம். லோகராணி

ஒப்பம். எளஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 6 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : முத்துக்காளை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

நான் கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். அ.சா.1 முதல் 5 வரையிலான சாட்சிகளை எனக்கு தெரியும். எதிரியை தெரியும். இறந்துபோன நல்லம்மாளை தெரியும். நல்லம்மாள் மானூத்துக்காரர். ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர். எதிரிக்கும் நல்லம்மாளுக்கும் திருமணமாகி 35 வருடங்கள் இருக்கும். எதிரிக்கு இரண்டு குழந்தைகள். ஒரு மகள் ஜெயா, மற்றொரு பையன் செல்வம். அவர் சுமார் 10 வருடங்களுக்கு முன்னால் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார். சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, நல்லம்மாள் மானூத்திற்கு , அவரது அக்கா மகள் வீட்டிற்கு சென்றுவிட்டார். எதிரிக்கும் இறந்தவருக்கும் அடிக்கடி சண்டை வரும். எதிரி அடிக்கடி நல்லடம்மாள் மீது சந்தேகப்பட்டு அடித்துவிடுார். பின்னர் எதிரி, அவரது சம்சாரத்தை கூப்பிட்டு வரலாம் என்று என்னையும் குபேந்தினையும் மானூத்திற்கு கூப்பிட்டார். நாங்கள் கூப்பிடபோனோம். பேரன் , பேத்தி எடுததுவிட்டீர்கள், இதற்குமேல் சண்டை சச்சரவு வேண்டாம் என்று சொல்லி

கோடாங்கிநாயக்கன்பட்டிக்கு நல்லம்மாளை அழைத்து வந்தோம். அதன்பின்னர் ஒரு மாதம் கழித்து நல்லம்மாளை சின்னபாண்டி வெட்டிவிட்டார் என தகவல் தெரிந்தது. 31.3.2018ம் தேதி வாக்குவாதம் நடந்தது. 1.4.2018ம் தேதி போய் பார்த்ததாகவும் தகவல் வந்தது. போலிசார் சம்பவம் நடந்த மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

இளையராஜாவும் நானும் ஒரே கோவில் கும்பிடும் பங்காளிகள் என்றால் சரி. நல்லம்மாள் இறந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடந்ததை கூறுகிறேன். என்னுடன் மானூத்திற்கு குபேந்திரன் வந்தார். ஒரு ஊரில் பஞ்சாயத்து செய்ய சென்றால் அந்த ஊர்காரர்கள் பஞ்சாயத்து பேச வரவில்லை. குபேந்திரன் இளையராஜாவின் சித்தப்பா.அவரும் எங்கள் கோவில் கும்பிடுபவர் என்றால் சரி. இளையராஜாவின் வீடும் குபேந்திரன் வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரி. மானூத்திற்கு எந்த தேதியில் சென்று பஞ்சாயத்து செய்தோம் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் பஞ்சாயத்திற்கு போனதாக சொல்வது பொய் என்றும், இளையராஜா எங்கள் கோவில் சாமி கும்பிடுபவர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நல்லம்மாளும் எதிரிக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது என்றும், இளையராஜா தான் அவரது மாமியாரை கொலை செய்துவிட்டார் என்றும், இளையராஜாவின் பங்காளி என்பதால் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சின்னபாண்டி தான் அவரது சம்சாரத்தை கூப்பிடுவதற்காக மானூத்திற்கு அழைத்து சென்றார். இளையராஜா அழைதது செல்லவில்லை.

ம.வி. இல்லை.

ஒப்பம். முத்துக்காளை
ஒப்பம். ளளள, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO. 574/2018

DEPOSITION OF WITNESS 7FOR PROSECUTION..

Name : முததுபாண்டி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

நான் கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன்.பார்வைமகஜரில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். 1.4.2018ம் தேதி காலை 9.00 மணிக்கு இறந்துபோன நல்லம்மாளின் உடலை சின்னப்பாண்டி தோட்டத்தில் இருந்து ஆம்புலன்ஸ்-ல் போலிசார் மற்றும் ஊர்மக்கள் ஏற்றினோம். அப்போது போலிசார் மேற்படி இடத்தில் இருந்தார்கள். பார்வைமகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதியிருந்தது என நான் படித்து பார்க்கவில்லை. பார்வைமகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4. கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள என் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5.

சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாககருதி கு.வி. செய்ய அரசு வழக்கறிஞர் அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது-

கு.வி. அரசு தரப்பில்

போலிசார் விசாரணையில் போலிசார் தயார் செய்த பார்வைமகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், 9.45 மணிக்கு சம்பவயிடத்தில் காணப்பட்ட இரத்தக்கறை படிந்த நைலான் பாய், இரத்தம்பட்ட மண் சிறிதளவு, மாதிரி மண் சிறிதளவு ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவம் கூறிவிட்டு தற்போது பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

கு.வி. எதிரி தரப்பில் - இல்லை.

ஒப்பம். முத்துபாண்டி
ஒப்பம். எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO. 574/2018

DEPOSITION OF WITNESS 8 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : மாயி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

நான் கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். பார்வைமகஜரில் 2-வதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு காலை 9 மணிக்கு சின்னப்பாண்டி தோட்டத்திற்கு வந்தார்கள். இறந்துபோன நல்லம்மாளின் பிரேதத்தை எடுதது ஆம்புலன்ஸ்-ல் ஏற்றினோம். கொலை நடந்த இடத்தில் இருந்து இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண் ஆகியவற்றை எடுததார்கள். சம்பவயிடத்தை அளந்தார்கள். பார்வைமகஜர் அ.சா.ஆ.6. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7. இரத்தக்கறை படிந்த மண் சா.பொ.2. இரத்தம்படாத மண் சா.பொ.2. போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

கு.வி. எதிரி தரப்பில்

எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் தான் போடதெரியும். பார்வைமகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சி கையொப்பம் போட்டேன். மண்ணை எதை வைத்து மடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் பார்வைமகஜர்ல, கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. போலிசார் நான் போனபோது அங்கு இருந்தார்கள். நாட்டாமை (வி.ஏ.ஓ). சம்பவயிடத்தில் இருந்தார்.. அவருடன் தலையாரியும் இருந்தா ர். அவர்கள் அதில் கையெழுத்து போட்டார்களா எனக்கு தெரியாது. தாசில்தார் இருந்தாரா என எனக்கு தெரியாது.

ம.வி. இல்லை

ஒப்பம். மாயி

ஒப்பம். ளளள, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS 9 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | :நவநீதராமன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

தற்போது மானூத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியில் இருக்கிறேன். கடந்த 1.4.2018ம் தேதி போத்தம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது கூடுதல் பொறுப்பாக ஜோதில்நாயக்கனூரில் பணிசெய்தேன். 1.4.2018ம் தேதி ஜோதில்நாயக்கனூர் அலுவலகத்தில் இருந்தபோது நானும், இளையசாமி என்பவரின் மகன் ராஜ்யபிரபு என்பவருடன் பட்டா சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது கோடாங்கிநாயக்கன்பட்டியை சேர்ந்த ஆஜர் எதிரிசின்னப்பாண்டி, மதியம் 2.15 மணிக்கு எனது அலுவலகத்திற்கு வந்து 31.3.2018ம் தேதி மதியம் 2.00 மணியை போல் என் மனைவியின் நடத்தையின்மீது சந்தேகப்பட்டு என் மனைவியை அருவாளால் வெட்டி கொலை செய்துவிட்டதாகவும், என்னிடம் ஆஜரானார். மேற்படி எதிரியும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, எனது அறிக்கையுடன் எழுமலை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளரிடம் நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.8. எதிரியின் வாக்குமூலம்

அ.சா.ஆ.9 எதிரியை மாலை 4.30 மணிக்கு அழைத்து சென்றேன். அப்போதது ஆய்வாளர் எதிரியை கைது செய்தார். பின்னர் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் ராஜ்யபிரபு என்பவரும் சாட்சிகளாக கையெழுத்திட்டோம். பின்னர் எதிரி எங்களை சம்பவயிடமான கோடாங்கிநாயக்கன்பட்டி சின்னப்பாண்டி தோட்டத்திற்கு அழைத்து சென்று வடக்கே இருந்து சீமைப்புல் புதர் அருகில் இருந்த அருவாளையும் கட்டம் போட்ட வெள்ளை சட்டை, கரும்பச்சை பாடர் போட்ட வேட்டி ஆகியவற்றை எடுதது ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அதில் நானும் ராஜ்யபிரபும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அருவாள் சா.பொ.3. சா.பொ.4. பச்சைகரையுடன் கூடிய வேட்டி சா.பொ.4. இரத்தம்பட்ட கட்டம் போட்ட வெள்ளை சட்டை சா.பொ.5. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10. சா.பொ.3 முதல் 5 ஐ கைப்பற்றியதற்கான மகஜர் அ.சா.ஆ.11. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி. எதிரி தரப்பில்

நான் கடந்த 9 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருக்கிறேன். என் பதவிக்காக உரிய பயிற்சி பெற்றிருக்கிறேன் என்றால் சரி. அதற்கான சட்ட விதிமுறைகள் எனக்கு தெரியும் என்றால் சரி. நான் சம்பவகாலத்தில் போத்தம்பட்டிக்கு, நாகமலைப்புதுக்கோட்டையில் இருநது வந்துசெல்வேன். பஸ்சிலும் செல்வேன். பைக்கிலும் செல்வேன். நிர்வாக அலுவலர் எந்த கிராமத்தில் வேலை பார்க்கிறாரோ அந்த கிராமத்தில் தான் குடியிருக்க வேண்டுமென்று சொன்னால் சரி.கூடுதல் பொறுப்பு ஜோதில்நாயக்கன்பட்டியில் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை இருந்தேன் என்ற விவரத்தை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. ஆய்வாளரும் அந்த சம்பந்தமான ஆவணங்களை என்னிடம் இருந்து கேட்கவில்லை. கூடுதல் பொறுப்பில் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை இருந்தேன் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால் சரி. கூடுதல் பொறுப்பில் தற்காலிக பொறுப்பு, கூடுதல் பொறுப்பு என இரண்டு வகை உள்ளது என்றால் சரி. நிர்வாக அலுவலர் விதிப்படி கூடுதல் பொறுப்பு

வருவாய் கோட்டாட்சியர் எங்களுக்கு பிறப்பிப்பார் என்றால் சரி. ஜோதில்நாயக்கனுர்ருக்கு அன்றைய தேதியில் தலையாரி இருந்தார் என்றால் சரியல்ல. அவர் விடுப்பில் இருந்தார். தலையாரி விடுப்பில் இருந்தார் என்பதற்கான ஆவணங்களை போலிசார் என்னிடம் இருந்துகேட்டு பெறவில்லை. நானும் கொடுக்கவில்லை. ஒரு கிராமத்தில் சந்தேகப்படும்படியான மரணம் ஏற்பட்டால் அந்த கிராமத்திற்குரிய தலையாரி என்னிடம் கூறவார் என்றால் சரி. என்னுடைய பணி அல்லாது பொறுப்பு பணிகளுக்கு சென்றால் என் உயர் அதிகாரியின் உத்தரவின்பரில் தான் செல்லவேண்டுமென்று சொன்னால் சரி. போலிசாருடன் சேர்ந்து விசாரணைக்கு ஒத்துழைப்பு தந்தது என் பணியல்ல என்றால் சரியல்ல. மேற்படி பணிக்கு சென்றதற்கு வாய்மொழியான உத்தரவின்பேரில் தான் சென்றேன். எழுத்துமுலமான உத்தரவு இல்லை. போத்தம்பட்டிக்கும் ஜோதில்நாயக்கன்பட்டிக்குமிடையே 9 கி.மீ.தூரம். இடைப்பட்ட தூரத்தில் நிறையகிராமங்கள்இருக்கிறது என்றும் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனிப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் உள்ளார்கள் என்றால் சரி. ஆஜர் எதிரி கொடுத்த புகாருடன் காவல்நிலையம் செல்லும்போது 6 மணி இருக்குமா என்றால் 4 மணி இருக்கும். அங்கிருந்து சம்பவயிடம் செல்வதற்கு மாலை 6 மணி ஆனது.அப்போது காவல்துறையினர் மோப்ப நசயுடன் வந்தார்கள் என்றால் காவல்துறையினர் மட்டும் வந்தார்கள். நாங்கள் ஒவ்வொரு மாதமும் எங்கள் பணி குறித்து உயர் அதிகாரிக்குஅனுப்பவேண்டுமென்பது சரி. ஆனால் யாரும் அதுபடி செய்வதில்லை. தற்போது தான்சுற்றறிக்கை கொடுக்கப்பட்டது. விதிக்கு புறம்பாக செய்தால் தவறு என்றால் சரி. ராஜ்யபிரபு யார் என்று வழக்கிற்கு முன்பு எனக்கு நேரடியாக தெரியாது. அவர் மானூத்து கிராமத்தை சேர்ந்தவர் என்பது தெரியும். மானூங்தது பட்டாவை பார்ப்பது மானூங்தது கிராம நிர்வாக அலுவலர் ஆவார்.அது ஜோதில்நயாககன்ர் கிராமத்திற்கு வராது என்றால் சரி. தற்போது இணையதளம் மூலம் கணினி மயம் ஆக்கப்பட்டுள்ளது. எதிரியிடம் நான் பெற்ற ஒப்புதல் வாக்கமூலத்தில் ராஜ்யபிரபும் கையெழுத்து செய்தார் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் தனி அறையில் வைத்து தான் வாங்கவேண்டும் என்றால் அவ்வாறு நான் தனி அறையில் வைத்து பதிவு செய்யவில்லை. ஜோதில்நாயக்கனுர்-ல்

இருந்து எழுமலை காவல்நிலையம் சுமார் 10 கிமி.தூரம் இருக்கும். வாக்குமூலம் வாங்கி கொண்டு புகாருடன் காவல் ஆய்வாளரிடம் எதிரியை ஒப்படைத்தேன். அங்கிருந்து போலிசாருடன் சேர்ந்து சம்பவயிடத்திற்கு சென்றேன் சரியல்ல. நான் என் இரு சக்கர வாகனத்தில் சென்றேன். எழுமலை காவல்நிலையத்தில் இருந்து ஓடை வழியாக கோடாங்கிநாயக்கன்பட்டிக்கு சென்றோம். எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தியை நான் பார்க்கும்போது அதில் இரத்தக்கறை இருந்தது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாளில் இரத்தக்கறை இல்லை. அருவாளை எங்கள் முன்பு எதிரி ஆஜர்படுததவில்லை என்றும், மோப்ப நாய் தான் எடுத்து கொடுத்தது என்றுசொன்னால் சரியல்ல. நாங்கள் சம்பவயிடத்திற்கு போகும்போது சம்பவயிடத்தில் 50,60 பேர்கள் இருந்தார்கள்.அவர்களிடம் போலிசார் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் வா்கினார்களா எனக்கு தெரியாது. என்னிடம் வாங்கினார்கள். என்னிடம் எதிரி ஆஜரானபோது அவரது சட்டையில் இரத்தம்சிந்தியிருந்தது என்றால் சரியல்ல. இரத்தக்கறை படிந்த வேட்டியை சீமைபுல் புதருக்குள் இருந்து எடுததுக்கொடுத்தார். அதில் புல், மண் ஆகியவைகள் ஒட்டியிருந்தது என்றால் சரிதான். அதோடுதான் எடுத்தார்கள் என்றால் சரி. அருவாளை எதிரி புதருக்குள் இருந்து தான் எடுத்துக்கொடுத்தார். அருவாளை எடுத்து ஆஜர் செய்தபோது இரத்தம் மற்றும் மண் இருந்தது. போலிசார் இரத்தக்கறையுடன் கூடிய அருவாள், சட்ை,வேட்டி என எழுதிக்கொண்டார்கள். நான் சொன்ன மாதிரி எதிரி, என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றும், சந்தேகமரணத்தின் அடிப்படையில்தான் நான் 1.4.2018ம் தேதி 9 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றம், சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதன்பேரில் எந்த சான்றுப்பொருட்களும் ஆவணங்களும் தயார் செய்யப்பட்டவில்லை என்றுசொன்னால் சரியல்ல. சந்தேக மரணம் என்பதால்தான் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றும் அதற்கு நான் உறுதுணையாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான்தான் இந்த சம்பவத்திற்கான புகாரை

சந்தேக மரணம் என்ற முறையில் கொடுக்கப்பட்டது என்றும்,அதன்பேரில் தான் காவல் அதிகாரிகள் மோப்பநாயுடன் வந்து விசாரணை செய்தார்கள் என்றும், அதன் அடிப்படையில் தான் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் அரசு அதிகாரி என்பதால் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் சட்டவிதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.3ல் அருவாளில் இரத்தக்கறை உள்ளது என தற்போது சாட்சி அருவாளை காட்டி சொல்கிறார்.

ஒப்பம். நவநீதராமன்
ஒப்பம். எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS        FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION..

| | | |
|---|---|---|
| Name | : | |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION..

| | | |
|---|---|---|
| Name | : | |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2019.

மு.வி.